பாயிரவியல் ஒரு மதிப்பெண்கள் :-

1. நன்னூலின் ஆசிரியர் யார்?
பவணந்தி முனிவர்.

2. நன்னூலாரின் தந்தை யார்? ஊர் எது?
சன்மதி முனிவர் - பொன்மதில் சூழ்ந்த சனகாபுரம்.

3. நன்னூல் தோன்றக் காரணமாய் இருந்தவன் யார்?
கங்க நாட்டை ஆண்ட மன்னன் அமராபரணன் சீயகங்கன்.

4. அற்புத மூர்த்தி யார்?
பிறப்பு, இறப்பு, மூப்பு, விருப்பு, வெறுப்பு அற்ற அருகதேவன்.

5. அற்புதமூர்த்தி அருளிய மொழிகள் எத்தனை?
18 [மூவெழு மொழிகள்]

6. நன்னூல் கூறும் தமிழக எல்லைகள் யாவை?
1. குணகடல் 2. குமரி 3. குடகம் 4. வேங்கடம்.

7. அரும்பொருள் ஐந்தாவன யாவை?
1. எழுத்து 2. சொல் 3. பொருள் 4. யாப்பு 5. அணி.

8. நன்னூலாரின் காலம் யாது?
சீயகங்கனின் காலமாகிய கி.பி 12-ம் நூற்றாண்டு

9. நன்னூல் என்பதற்கு இலக்கணக் குறிப்புத் தருக.
நன்மையாகிய நூல் (பண்புத்தொகை), நன்னூல் - மங்கலச்சொல்.

10. நன்னூலின் வேறுபெயர்கள் யாவை?
1. பின்னூல் 2. சிற்றதிகாரம் 3. இளம்பூரணத்தின் குழந்தை

11. நன்னூலின் முதல் உரையாசிரியர் யார்?
மயிலைநாதர் (காண்டிகை உரை)

12. எழுத்ததிகாரத்தின் அமைப்பு யாது?
பாயிரவியல் (55) நீங்க 5 இயல்கள் - நூற்பாக்கள் 202.

தேர்வு எண் -2 நாள் :- 20-11-2020

1. **பாயிரவியலில் அமைந்த நூற்பாக்கள் :-**

பாயிரவியலில் அமைந்த நூற்பாக்கள் மொத்தம் ஐம்பத்தி ஐந்து.

2. **பாயிரத்தின் வேறு பெயர்கள் :-**

| |
|---|
| முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். |

**விளக்கம் :-**

பாயிரம் 1> முகவுரை 2> பதிகம் 3> அணிந்துரை 4> நூன்முகம் 5> புறவுரை 6> தந்துரை 7> புனைந்துரை என ஏழு வகைப்படும்.

3. **பாயிரத்தின் வகைகள் :-**

பாயிரம் இரண்டு வகைப்படும்.

அவை,

| |
|---|
| பாயிரம் பொதுச் சிறப்பு என இரு பாற்றே. |

**விளக்கம் :-**

பாயிரம் 1> பொதுப்பாயிரம் 2> சிறப்புப்பாயிரம் என இருவகைப்படும்.

4. **நூலின் வகைகள் :-**

| |
|---|
| முதல் வழி சார்பு என நூல் மூன்று ஆகும். |

**விளக்கம் :-**

1> முதல்நூல் 2> வழி நூல் 3> சார்பு நூல் என நூல் மூன்று வகைப்படும்.

5. **நூலினால் ஏற்படும் பயன்கள் :-**

| |
|---|
| அறம் பொருள் இன்பம் வீடு அடைதல்நூல் பயனே. |

**விளக்கம் :-**

1> அறம் 2> பொருள் 3> இன்பம் 4> வீடு ஆகிய நான்கையும் அடைதல் நூலால் ஏற்படும் பயன்களாகும்.

Scanned with CamScanner

## 6. சார்பு (அ) புடைநூல் :-

> இருவர் நூற்கும் ஒருசிறைத் தொடங்கித்
> திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்.

**விளக்கம் :-**

முதல் நூல், வழி நூல் ஆகியவற்றின் முடிபைச் சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை பொருந்தாமல் வேறுபட்டும் நிற்பது புடை நூலாகும். இதனைச் சார்புநூல் என்றும் கூறுவர்.

**எடுத்துக்காட்டு :-**

* முதல்நூல் - அகத்தியம்
* வழி நூல் - தொல்காப்பியம்
* சார்பு நூல் - நன்னூல்.

## 7. ஒரினப் பொருளை ஒருவழி வைப்பது :-

> நேரின மணியை நிரல்பட வைத்தாங்(கு)
> ஒரினப் பொருளை ஒருவழி வைப்ப(து)
> ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.

**விளக்கம் :-**

* ஒரு சாதி மணிகளை ஒரு வரிசையாகப் பதித்து வைப்பது உலக இயல்பாகும். அதுபோல ஒரு சாதியாய் உள்ள பொருள்களை ஒன்றுபடக் கூறுவது ஓத்து என்னும் உறுப்பாகும் என்று இலக்கணம் அறிந்த புலவர்கள் கூறுவர்.
* அதாவது, ஒரினப் பொருளைப் பற்றிப் பேசும் பல சூத்திரங்கள் சேர்ந்தது ஓத்து ஆகும். எழுத்தியலில் எழுத்துகளைப் பற்றி பல சூத்திரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## 8. படலம் (அ) அதிகாரத்தின் இலக்கணம் :-

> ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
> பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

**விளக்கம் :-**

* ஒரு வகையாய் அமையாது கலப்புற்ற பல்வகைப் பொருள்களைப் பொது வகையால் தொகுத்து அமைப்பது படலமாகும்.
* அதாவது, இனப் பொருள்கள் தனித்தனியாக அமைந்த பல

இயல்கள் சேர்ந்தது படலமாகும். எழுத்து, பதம், புணர்ச்சி போன்ற தனித்தனி இயல்கள் பொது வகையால் எழுத்ததிகாரமாயின.

9. **சூத்திரத்தின் நிலைகள் :-**

> ஆற்றொழுக்கு அரிமா நோக்கம் தவளைப்
> பாய்த்துப் பருந்தின் வீழ்வு அன்னசூத் திரநிலை.

**விளக்கம் :-**

1) தொடர்ந்து செல்லும் ஆற்றுநீரின் ஓட்டத்தைப் போன்று இடையறாது ஒரு பொருளைப் பற்றிச் சில பல நூற்பாக்கள் தொடர்ந்து நிற்றல்.

2) முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின் பார்வை போன்று இடைநிற்கும் சூத்திரம் முன்னும் பின்னும் சென்று தழுவுதல்.

3) இடைவெளி விட்டுப் பாயும் தவளையைப் போல ஒரு சூத்திரம் சில சூத்திரங்களை இடையில் விட்டுப் பின்னுள்ளதோடு பொருந்துதல்,

4) ஒன்றைக் கவர உயரத்திலிருந்து இறங்குகின்ற பருந்தைப் போலச் சூத்திரம் ஒரு காரணம் பற்றித் தொலைவிலுள்ள பிறிதொரு சூத்திரப் பொருளைச் சென்று பொருந்துதல்.

10. **சூத்திரத்தின் வகைகள் :-**

> பிண்டம் தொகை வகை குறியே செய்கை
> கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

**விளக்கம் :-**

1) பலவகைப் பொருள்களையும் ஒருசேரத் தொகுத்துக் கூறுதல். 2) பொருள்களை வேறு வேறாகத் தொகுத்துக் கூறுதல். 3) தொகுத்ததை விரித்துக் கூறுதல். 4) இ:து இன்னது எனக் கூறுதல். 5) புணர்ச்சி போன்றவற்றைச் செய்வதைக் கூறுதல். 6) கூறப்பட்ட இலக்கணங்களுக்கு எல்லாம் புறத்தில் அடையாகி நிற்றல்.

11. **காண்டிகை :-**

> கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
> அவற்றொடு வினா விடை ஆக்க லானும்
> சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை.

Scanned with CamScanner

விளக்கம் :-

1> கருத்துரை கூறுதல் 2> பதப்பொருள் கூறுதல் 3> எடுத்துக்காட்டு நிறுவுதல் ஆகிய மூன்றனைச் சொல்லுதல், அவற்றுடன் 4> வினா எழுப்புதல் 5> விடை கூறி விளக்குதல் ஆகிய இரண்டையும் கூட்டிச் சொல்லுதல் எனும் ஐந்தால் சூத்திரத்தின் பொருளை விளக்குவது காண்டிகை ஆகும்.

12. நல்லாசிரியருக்குக் காட்டப்படும் உவமைகள் :-

ஆசிரியர்க்கு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவை உவமைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

13. ஆசிரியர் ஆகாதவருக்குக் காட்டப்படும் உவமைகள் :-

ஆசிரியர் ஆகாதவர்க்குக் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை உவமைகளாகும்.

14. நிறைகோலினை ஆசிரியரோடு ஒப்பிடுதல் :-

> ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
> மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே.

விளக்கம் :-

எடையைக் காட்டல், நடுவுநிலைமை ஆகியவை நிறைகோலின் இயல்புகளாகும். இவற்றிற்கு உவமையாகும்படி ஆசிரியர் இயல்பு அமையும்.

| நிறைகோல் | ஆசிரியர் |
|---|---|
| 1. பொருளின் அளவை ஐயம் தீரத் தெளிவாகக் காட்டுதல். | கல்வியை ஐயமறக் கற்பித்துத் தருதல். |
| 2. எப்பக்கமும் சாயாமல் நடுநிற்றல். | வேண்டியவர், வேண்டாதவர் என்று எவர் பக்கமும் சாயாது நடுநிற்றல். |

15. கழற்குடம், மடற்பனை உவமை :-

ஆசிரியர் ஆகாதார்க்குக் கழற்குடமும், மடற்பனையும் உவமையாகக் காட்டப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

> பெய்தமுறை அன்றிப் பிறழ உடன்தரும்
> செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

**விளக்கம் :-**

இது இரு குணங்களை உடையது. அவை,

| கழற்குடம் | ஆசிரியர் ஆகாதார். |
| --- | --- |
| 1. முன் இட்ட காய்களைப் பின்னும் பின் இட்டதை முன்னுமாக மாற்றித் தருவது. | முன்கூற வேண்டியதைப் பின்னும் பின் கூற வேண்டியதை முன்னும் கூறி இடர்ப்பட வைப்பர். |
| 2. பெய்த காய்களை விரைவில் வெளிப்படுத்துவது. | கற்போர் மனதில் கொள்ள முடியாதபடி விரைவாகக் கூறுவர். |

## மடற்பனை

ஏற முடியாதபடி இன்னல் செய்யும் மட்டைகளை உடையது மடற்பனை.

**மடற்பனை தன்மை :-**

> தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
> மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

**விளக்கம் :-**

இது ஒரு குணத்தை உடையது.

| மடற்பனை | ஆசிரியர் ஆகாதார். |
| --- | --- |
| பழங்களைத் தானே கொடுப்பதன்றி விரும்பிய நேரத்தில் விரும்பும் வகையில் ஏறிப் பறித்துக் கொள்ள கிடைக்காது. | தானே முன்வந்து கற்பிக் கொடுப்பது அன்றிப் பிறர் தன்னிடம் நெருங்கிக் கற்கவரின் அவர்க்குக் கற்பிக் கொடுக்க மாட்டார். |

16. பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு :-

பருத்திக் குண்டிகையின் தன்மை :

| |
|---|
| அரிதின் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு<br>எளிதுஈ வில்லது பருத்திக் குண்டிகை. |

விளக்கம் :-

| பருத்திக்குண்டிகை | ஆசிரியர் அகாதார். |
|---|---|
| 17. உட்கொள்ளும் போது பஞ்சைச் சிறிது சிறிதாக ஏற்றுக் கொள்ளும் | தான் கற்ற காலத்தில் மிகவும் வருந்தித் துன்பப்பட்டுச் சிறிது சிறிதாகவே கற்றிருப்பர். |
| 27. கொடுக்கும் போதும் சிறிது சிறிதாகவே எடுக்க இடங்கொடுக்கும். | பிறருக்குக் கற்பிக்கும் போது மிகவும் வருந்தித் துன்பபட்டுச் சிறிது சிறிதாகவே கற்றுக் கொடுப்பர். |

முடத்தெங்கின் தன்மை :

| |
|---|
| பல்வகை உதவி வழிபடு பண்பின்<br>அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே. |

| முடத்தெங்கு | ஆசிரியர் அகாதார். |
|---|---|
| நீர்ப்பாய்ச்சி உரம் இட்டு வளர்ப்பவருக்குப் பயன்படாமல் அடுத்தவருக்குப் பயன்களைத் தருவது. | பொருள் கொடுத்து வழிபடுவர் -களை வெறுத்துப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர். |

17. மாணாக்கர் ஆவதற்கு உரியவர் :-

| |
|---|
| தன்மகன் ஆசான் மகனே மன்மகன்<br>பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே<br>உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே. |

விளக்கம் :-

1. தன் மகன் 2. தன் ஆசிரியர் மகன் 3. அரசன் மகன்
4. மிகுந்த பொருளைக் கொடுப்பவன் 5. தன்னை வழிபடுபவன்,
6. தான் உரைப்பதை விரைந்து ஏற்கும் அறிவுடையவன்.

Scanned with CamScanner

18. தலை, இடை, கடை மாணவர்க்குரிய உவமைகள் :-

> அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
> இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
> அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

விளக்கம் :-

1. தலை மாணாக்கர் அன்னத்திற்கும் பசுவிற்கும் ஒப்பாவர்.
2. இடை மாணாக்கர் மண்ணையும் கிளியையும் ஒத்தவர்கள்.
3. கடை மாணாக்கர் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரியைப் (பன்னாடை) போன்றவர்கள்.

19. முறை அறிந்து உரைக்க செய்ய வேண்டியவை :-

> முன்னால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.

விளக்கம் :-

முன்பு முறை பாடம் கேட்டால் [ஆசிரியன் கற்பித்த முறை அறிந்து] மாணவன் எண்ணும் நிலையிலிருந்து மாறி அப்பாடத்தை விளங்க உரைக்கும் ஆசிரியனாகும் தன்மை பெறுவான்.

20. ஆசிரியரிடம் பழகும் முறைக்குக் காட்டும் உவமைகள் :-

> அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
> நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
> எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
> அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே.

விளக்கம் :-

1. குளிர் காய்பவன் நெருப்பிடத்து நீங்காமலும் நெருங்காமலும் இருப்பதைப் போன்று மாணவன் ஆசிரியரிடம் ஆர்வம் கொண்டு அச்சம் கொண்டு நீங்காமலும் மிக நெருங்காமலும் வேண்டும்.

2. பொருளை விட்டு நீங்காது செல்லும் நிழலைப் போல ஆசிரியரைத் தொடர்ந்து மாணவன் செல்ல வேண்டும்.

3. அன்பு ததும்பும் உள்ளத்துடன் ஆசிரியன் மகிழ்ந்து இருப்பதற்குரிய அறத்திற்கு மாறாகாத செயல்களைச் செய்து நிற்க வேண்டும்.

21. நூல் யாப்பின் வகைகள் :-

> தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு.
> எனத்தகும் நூல்யாப்பு ஈரிரண்டு என்ப.

விளக்கம் :-

1. விரிந்து கிடப்பவற்றைத் தொகுத்துச் சொல்லுதல்.
2. தொகையாய்க் கிடப்பவற்றை விரித்துச் சொல்லுதல்.
3. தொகுத்தும் விரித்தும் சொல்லுதல்.
4. ஒரு மொழியிலுள்ள நூலை வேறு மொழியில் பெயர்த்துக் கூறுதல்.

22. சிறப்புப்பாயிரத்தை செய்தற்குரியவர் :-

> தன்ஆசிரியன் தன்னொடு கற்றோன்
> தன்மாணாக்கன் தகும் உரை காரன் என்று
> இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே.

விளக்கம் :-

1. தனக்கு நூலைக் கற்பித்த ஆசிரியன்
2. தன்னுடன் பாடம் கேட்டவன்
3. தன்னுடைய மாணாக்கன் 4. தான் செய்த நூலுக்கு உரை எழுதும் தகுதி படைத்தவன்.

23. தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள் :-

> மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
> தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்

மன்னிய அவையிடை வெல்லுறு பொருதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே.

விளக்கம் :-

1) மன்னன் அவைக்கு ஓலை எழுதுதல். 2) தன் வலிமையை அறியாதவர் 3) அவைக்களத்தில் வாதம் செய்து வெல்லுதல் 4) தன்னைப் பிறர் பழித்தல் ஆகிய நான்கு இடங்களிலும் புலவன் ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் தகுதியானதாகும்.

24. பாயிரத்தின் இன்றியமையாமை :-

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

விளக்கம் :-

ஆயிரம் உறுப்புக்களைக் கொண்டதாய்ப் பரந்து விரிந்த நூலாக இருப்பினும் பாயிரத்தைப் பெறாவிடில் அது நூலாகாது.

25. பாயிரத்தின் சிறப்பு :-

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும் போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

விளக்கம் :-

1) மாளிகைக்கு ஓவியமும், 2) பெரிய நகரத்திற்குக் கோபுரமும் 3) அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடைய பெண்ணுக்கு அணியும் அழகு சேர்ப்பன. அவற்றைப் போலக் கருதி, நுண்ணிய பொருளைக் கூறும்

Scanned with CamScanner

பாயிரங்களை எவ்வகைப்பட்ட நூல்களுக்கும் முன்னர் வைத்தனர் பெரியோர். ஆதலால் முதலில் பாயிரம் இல்லாதது நூலாகாதாம்.

தேர்வு எண் - 03. 21/11/2020.

1. நூல் பெயர்க்காரணம் :-

| |
|---|
| பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்<br>செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத<br>கையேவாய் ஆகக் கதிரே மதியாக<br>மையிலா நூல்முடியு மாறு. |

விளக்கம் :-

* சொற்கள் பஞ்சாகவும் செய்யுள் இழையாகவும் செம்மையான சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும் குன்றாத வாய் கையாகவும் அறிவு கதிர் என்னும் கருவியாகவும் கொண்டு குற்றமில்லாத கல்விநூல் அமைக்கப்படுகிறது.

* சொல் - செய்யுள் - புலவன் - வாய் - அறிவு
* பஞ்சு - இழை - பெண் - கை - கதிர் [இரட்டை]

* ஒரு பெண் தனது கையினால் கதிராகிய கருவியைக் கொண்டு பஞ்சினை இழைத்து நூலாக்குகிறாள். அதுபோலப் புலவன் தனது வாயினால் அறிவாகிய கருவியைக் கொண்டு சொற்களால் செய்யுள் இயற்றி நூலாக்குகிறான். நூலைப் போன்று செய்யப்படுவதால் நூல் என்பது உவம ஆகுபெயராகும்.

## 2. பத்து வகை அழகுகள் :-

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை, உடைமை ஆழமுடைத்து ஆதல்
முறையின் வைப்பே உலகம்மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது(து)
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே

**விளக்கம் :-**

1). சொற்களைத் தேவையின்றி விரிக்காமல் சுருக்கிக் கூறுதல்.

2). சுருங்கச் சொல்லினும் தெளிவுபடக் கூறுதல்.

3). கற்போர்க்கு இனிமை தரும் சொற்களைக் கூறுதல்.

4). குற்றமற்றச் சொற்களைச் சேர்த்தல்.

5). இடத்திற்கேற்ப சந்த நயம் புலப்பட அமைத்தல்.

6). கற்கக் கற்க ஆழ்ந்த கருத்தை உடையதாதல்.

7). எழுத்து, சொல், பொருள், இயல், அதிகாரம் போன்றவற்றைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல்.

8). சான்றோர் வழக்கொடு மாறுபாடு இன்றிக் கூறுதல்.

9). சிறந்த பொருளை வெளிப்படுத்துதல்.

10). எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பொருளை விளங்க வைத்தல்.

---

## 3. சிறப்புப் பாயிரத்தின் கூறுகள் :-

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

**விளக்கம் :-**

1). நூலை எழுதியவனின் பெயர். 2). நூலின் வழி.

3). நூல் வழங்கும் நாட்டின் எல்லைகள். 4). நூலின் பெயர்.

Scanned with CamScanner

5. தொகை, வகை, விரியுள் ஒன்றாதல். 6. நூல் கூறும் பொருள் 7. நூலைக் கேட்டற்கு உரியர். 8. நூலைக் கேட்பதால் உண்டாகும் பயன்.

> காலம் களனே காரணம் என்றிவ்
> மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

விளக்கம் :-

9. நூல் செய்த காலம் 10. நூலை அரங்கேற்றிய அவைக்களம். 11. நூல் செய்தற்குரிய காரணம்.

4. மாணாக்கர் இயல்பு :-

> அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
> இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
> அன்னர் தலைஇடை கடைமா ணாக்கர்.

விளக்கம் :-

1. தலை மாணாக்கர் அன்னத்திற்கும் பசுவிற்கும் ஒப்பாவர்.
2. இடை மாணாக்கர் மண்ணையும் கிளியையும் ஒத்தவர்கள்
3. கடை மாணாக்கர் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரியைப் (பன்னாடை) போன்றவர்கள்.

தலைமாணாக்கர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்னம் | பாலும் நீரும் கலந்திருப்பின் பாலை உண்டு நீரை நீக்கும் | ஆசிரியர் கூற்றிலிருந்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு தேவையற்றதை விட்டு விடுவர். |
| 2. | பசு | நல்ல புல்லைக் கண்டால் விரைந்து மேய்ந்து பின்னர் அசைபோட்டு விழுங்கும். | ஆசிரியரிடம் கேட்ட பாடத்தைச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வந்து சிந்தித்து மனத்தில் நிறுத்துவர். |

## இடை மாணாக்கர்.

1. மண் : உழைப்பிற்கேற்ப மண் விளைவினைக் கொடுக்கும் — ஆசிரியரின் உழைப்பிற்கு ஏற்ற அறிவைப் பெறு[வர்]

2. கிளிப்பிள்ளை : சொன்னதை மட்டுமே சொல்லும். — ஆசிரியர் கற்பித்த நூற்பொருளைத் தவிரப் பிறவற்றைச் சொல்லார்.

## கடை மாணாக்கர்

1. வெட்டைக்குடம் (இல்லாக்குடம்) : நீரை ஊற்றும் போதே வெளிவிடும். — பாடம் கேட்கும் போதே மனத்தில் கொள்ளாமல் விட்டுவிடுவர்.

2. ஆடு : ஓரிடத்தில் மேய்ந்து வயிறு நிரம்பாது அலைந்து திரியும். — ஓர் ஆசிரியனிடம் முழுமையா[கக்] கல்லாது பலரிடமும் சென்று முழுமையில்லா அறிவுடன் இருப்பர்.

3. எருமை : நல்ல நீரைக் கலக்கிக் குடிக்கும். — ஆசிரியரின் உள்ளத்தை வருத்[தம்] செய்து கற்பர்.

4. நெய்யரி (பன்னாடை) : நல்ல பொருளை விட்டு அழுக்கைத் தேக்கிக் கொள்ளும். — நல்லதை விடுத்துத் தேவையற்றதை மனத்தில் நிறுத்துவர்.

---

தேர்வு எண் : 4 — 24/11/2020.

1. முப்பத்திரண்டு உத்திகள் :

நுதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பே

தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்

முடித்துக் காட்டல் முடிவு இடம் கூறல்

தான் எடுத்து மொழிதல் பிறன்கோள் கூறல்

சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொல் புணர்த்தல்

இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்.

Scanned with CamScanner

ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து ஒழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்.
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்.
இன்னது அல்லது இதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூல் முடிந்தது தான்உடன் படுதல்
தன்குறி வழக்கம் மிகஎடுத்து உரைத்தல்
சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னினம் முடித்தல்
உய்த்து உணர வைப்பு என உத்திஎண் நான்கே.

விளக்கம் :-

1) நான் இதனைச் சொல்லப் போகின்றேன் எனக் கூறி தொடங்குதல்.

2) இயல்களைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல்.

3) பல பொருள்களையும் ஓரிடத்தில் தொகுத்துச் சொல்லுதல்.

4) தொகுத்துக் கூறியதை வேறு வேறாக வகுத்துக் காட்டுதல்.

5) விரித்துச் சொன்ன பொருள்களை முடித்துக் காட்டுதல்.

6) சொல்லும் இலக்கணத்திற்குரிய இலக்கியம் தோன்றும் இடத்தைக் கூறுதல்.

7) முன்னோரின் கூற்றுக்களை அப்படியே எடுத்துக் காட்டல்.

8) பிறர் கொள்கைகளைக் கூறுதல்.

9) சொல்லின் பொருள் தெளிவுபட விளங்குமாறு விரித்துரைத்தல்.

10) ஒன்றற்கொன்று தொடர்புடைய சொற்களை ஓரிடத்தில் கூறுதல்.

11) இரண்டு பொருள்படச் சொல்லுதல்.

12) முன்னர்க் காரணம் கூறாமல் கூறியவற்றைப் பின்னர்க் காரணம் காட்டி நிறுவுதல்.

13) ஒன்றற்குரிய இலக்கணத்தைப் பொருந்தும் பிறவற்றிற்கும் இலக்கணமாகக் கூறுதல்.

14) ஒன்றற்குக் கூறிய இலக்கணம், அதனைப் பெறுவதற்குரிய

Scanned with CamScanner

மற்றவற்றோடு தொடர்புபடுத்திக் கூறுதல்.

15. வழக்கு இழந்தவற்றை நீக்குதல்.

16. புதிதாய்த் தோன்றியதனைத் தழுவி இலக்கணம் அமைத்தல்.

17. பின்பு எடுத்து ஆள்வதற்கு உரிய ஒன்றை முன்னரே கூறுதல்.

18. பின்னர் எடுத்தாளுவதற்கு ஏதுவாக ஒன்றைப் பொருத்தம் கருதி பின்னே வைத்தல்.

19. மாறுபட உருவனவற்றை வேறுவேறாக முடித்துக் காட்டுதல்.

20. வேறு வேறாக முடிந்ததைப் பொது இலக்கணத்தால் தொகுத்துக் கூறு[தல்]

21. இவ்விதியைப் பின்பு சொல்வோம் எனக் கூறுதல்.

22. இவ்விதியை முன்னர்ச் சொன்னோம் எனக் கூறுதல்.

23. மாறுபட்ட இருவரின் கொள்கைகளுள் ஒன்றைத் துணிந்து ஏற்றுக் கொள்ளல்.

24. தான் கூறிய இலக்கணத்திற்கு உரிய இலக்கியத்தைத் தானே எடுத்துக் காட்டல்.

25. தான் சொல்லும் இலக்கணத்தைத் தான் எடுத்துக் காட்டிய இலக்கியத்தில் பொருந்தும்படி அமைத்துக் காட்டுதல்.

26. ஐயம் தோன்றிய இடத்தில் அவ்ஐயத்தை நீக்கும் முகமாக இதுதான் எனத் துணிந்து சொல்லுதல்.

27. சொல்லியவற்றைக் கொண்டு சொல்லப்படாதவற்றுக்கும் இலக்கண[ம்] பொருந்தக் கூறுதல்.

28. பிற நூல்களின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளுதல்.

29. தன்னால் புதிதாக எடுத்துரைக்கப்பட்டதைப் பல இடங்களிலும் கூறுதல்.

30. சொல் முடிந்த இடத்திலேயே அதன் பொருளையும் முடிவு பெறுமாறு அமைத்துக் காட்டுதல்.

31. ஒன்றற்குக் கூறப்பட்ட விதி அதனோடு ஒற்றுமைப் பட்டதற்கும் அவற்றோடு இனமானவற்றுக்கும் பொருந்தும்படி அமைத்தல்.

32. சில விதிகளைக் கொண்டு வேறு பொருளை ஆராய்ந்து அறியும்படி அமைத்துக் காட்டுதல்

தேர்வு எண் : 5 25/11/2020

## 1. ஆசிரியர் ஆகாதாரின் இயல்பு :-

> மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
> அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்
> கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
> முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
> உடையோர் இலர்ஆ சிரியரா குதலே.

**விளக்கம் :-**

1. நல்லாசிரியருக்குக் கூறப்பட்ட நற்குணங்களும் கல்வி கற்பிக்கும் ஆற்றலும் இல்லாமை.
2. இழிந்த குணங்களை இயல்பாகக் கொண்டிருத்தல்.
3. பொறாமை 4. பேராசை 5. வஞ்சகம் உடைமை.
6. மாணவர்களைக் கண்டு தான் அஞ்சுதல், தன்னைக் கண்டு மாணவர்கள் அஞ்சும்படி பேசுதல் 7. கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு போன்ற மாறுபட்ட தன்மை உடையராதல்.

ஆசிரியர் ஆகாதார்க்குக் கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை உவமையாக காட்டப்பட்டுள்ளன.

**கழற்குடத்தின் தன்மை :-**

> பெய்தமுறை அன்றிப் பிறழ உடன்தரும்
> செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

**விளக்கம் :-**

| கழற்குடம் | ஆசிரியர் ஆகாதார். |
|---|---|
| 1. முன் இட்ட காய்களைப் பின்னும் பின் இட்டதை முன்னுமாக மாற்றித் தருவது. | முன்கூற வேண்டியதைப் பின்னும் பின்கூற வேண்டியதை முன்னும் கூறி இடர்ப்பட வைப்பர். |
| 2. பெய்த காய்களை விரைவில் வெளிப்படுத்துவது. | கற்போர் மனத்தில் கொள்ள முடியாதபடி விரைவாகக் கூறுவர். |

## மடற்பனையின் தன்மை

> தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
> மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

**மடற்பனை** — ஆசிரியர் ஆகாதார்.

17. பழங்களைத் தானே கொடுப்பதன்றி விரும்பிய நேரத்தில் விரும்பும் வகையில் ஏறிப் பறித்துக் கொள்ள இடந்தராது.

தானே முன் வந்து கற்றுக் கொடு... அன்றிப் பிறர் தன்னிடம் எதிர்... கற்கவரின் அவர்க்குக் கற்றுக் கொடுக்க மாட்டார்.

## பருத்திக் குண்டிகையின் தன்மை

> அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு
> எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

**பருத்திக்குண்டிகை** — ஆசிரியர் ஆகாதார்.

17. உட்கொள்ளும் போது பஞ்சைச் சிறிது சிறிதாக ஏற்றுக் கொள்ளும்.

தான கற்ற காலத்தில் மிகவும் வருந்தித் துன்பப்பட்டுச் சிறிது சிறிதாகவே கற்றிருப்பர்.

27. கொடுக்கும் போதும் சிறிது சிறிதாகவே எடுக்க இடங்கொடுக்கும்.

பிறருக்குக் கற்பிக்கும் போது மிகவும் வருந்தித் துன்பப்பட்டுச் சிறிது சிறிதாகவே கற்றுக் கொடுப்பர்.

## முடத்தெங்கின் தன்மை

> பல்வகை உதவி வழிபடு பண்பின்
> அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே.

**முடத்தெங்கு** — ஆசிரியர் ஆகாதார்.

17. நீர்ப்பாய்ச்சி உரம் இட்டு வளர்ப்பவருக்குப் பயன்படாமல் அடுத்தவருக்குப் பயன்களைத் தருவது.

பொருள் கொடுத்து வழிபடுபவர்களை ஒதுக்கிப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர்.

தேர்வு எண் -6 27/11/2020.

1. பாடம் கேட்கும் முறை :-

> கோடன் மரபே கூறும் காலைப்
> பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
> குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
> இருஎன இருந்து சொல்லெனச் சொல்லிப்
> பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
> சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
> செவிவா யாக நெஞ்சு களனாகக்
> கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்துப்
> போஎனப் போதல் என்மனார் புலவர்.

விளக்கம் :-

1. தக்க காலத்தில் பாடம் கேட்கச் செல்ல வேண்டும்.
2. ஆசிரியனை விருப்பமுடன் வழிபட வேண்டும்.
3. ஆசிரியனின் குணம் அறிந்து பழக வேண்டும்.
4) அவனின் குறிப்பறிந்து செயல்பட வேண்டும்.
5) அமர் என்று கூறிய பின்னரே அமர வேண்டும்.
6) பழைய பாடங்களைச் சொல் என்றவுடன் சொல்ல வேண்டும்.
7. மிகுந்த தாகம் உள்ளவன் நீரைப் பருகத் துடிப்பது போல, விருப்பத்துடன் பாடம் கேட்க வேண்டும்.
8. அசைவற்று இருக்கின்ற சித்திரம் போல அடக்கமுடன் பாடம் கேட்க வேண்டும்.
9. செவியை வாயாகவும் நெஞ்சைக் கொள்ளிடமாகவும் கொண்டு பாடம் கேட்க வேண்டும்.
10. முன்பு கேட்டவற்றைத் திரும்பவும் கேட்டு மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.
11. ஆசிரியர் போய்வா என்று சொன்ன பின்னரே கற்கும் அவ்விடத்தை விட்டு அகல வேண்டும்.

2. கற்பிக்கும் தன்மை :-

> ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
> காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
> சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
> ... படுபொருள் உள்ளத்து அமைத்து

விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல் என்ப.

விளக்கம் :-

1). நல்ல இடத்தையும் ஏற்ற காலத்தையும் தேர்ந்தெடுத்தல்.

2). தான் மாணவர்களைக் காணும் படியாகவும் தன்னை மாணவர்கள் காணும்படியாகவும் மேம்பட்ட இடத்தில் இருத்தல்.

3). கடவுளைத் தொழுதே பின்னரே கற்பிக்கத் தொடங்குதல்.

4). கற்பிக்கப் போகும் பொருளைத் தன் மனத்துள் முன்னரே நன்கு நிறைத்து வைத்தல்.

5). பொறுமையுடனும் 6). சினம் இல்லா இனிய முகத்துடன் 7). விருப்பத்தோடும் கற்பித்தல் 8). மாணாக்கரின் மனநிலை அறிந்து அதற்கு ஏற்றபடி எடுத்துரைத்தல். 9). தன்மனம் கோணாமலும் மாணவர் மனம் கோணாமலும் நூலைக் கற்றுக் கொடுத்தல்.

3. தந்திர உத்தியின் இலக்கணம் :-

நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகை ஆம்எனத்
தகும் வகை செலுத்துதல் தந்திர உத்தி.

விளக்கம் :-

* ஓர் இலக்கண நூலால் செய்யப்படும் பொருள் உலக வழக்கொடும் செய்யுள் வழக்கொடும் பொருந்தி வரும். அப்பொருள் மற்றொரு நூலில் பொருந்தும் இடத்தை அறிந்து இவ்விடத்திற்கு இது இவ்வகையில் பொருந்தும் என ஏற்கும் வகையால் அமைத்துக் காட்டுவதே தந்திர உத்தியாகும்.

4. நூல்களின் வகைகள் :-

முதல் வழி சார்பு என நூல்மூன்று ஆகும்.

விளக்கம் :-

Scanned with CamScanner

1. முதல் நூல் 2) வழிநூல் 3). சார்பு நூல் என மூவகைப்படும்.

முதல் நூல் :-

> அவற்றுள்
> வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.

விளக்கம் :-

* இயல்பாகவே நல்வினை, தீவினைகளிலிருந்து நீங்கியவன் இறைவன். அவன் தெளிந்த அறிவுடையவன். அவ் இறைவனால் செய்யப்பட்ட நூல் முதல் நூல் என்று சிறப்பிக்கப் பெறுவதாகும்.

* இறைவனை அன்றி இறைவனுடைய அருள் பெற்ற சான்றோர்களால் இயற்றப் பெறுவதும் முதல் நூலாகவே கருதப் பெறும்.

வழிநூல் :-

> முன்னோர் நூலின் முடிபுஒருங்கு ஒத்துப்
> பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
> அழியா மரபினது வழிநூல் ஆகும்.

விளக்கம் :-

* முன்னோர் இயற்றிய நூல்களின் முடிபுகளைப் பெரிதும் தழுவி நின்று நூல் செய்வோன், காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைத் தம் நூலின் இணைத்து எல்லாராலும் போற்றப்பெறும் பெருமை உடையதாகச் செய்வது வழிநூல் ஆகும்.

புடைநூல் (சார்பு நூல்) :-

> இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
> திரிபு வேறு உடையது புடைநூல் ஆகும்.

விளக்கம் :-

* முதல்நூல், வழி நூல் ஆகியவற்றின் முடிபைச் சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை பொருந்தாமல் வேறுபட்டும் நிற்பது புடை நூலாகும். இதனைச் சார்பு நூல் என்றும் கூறுவர். (எ-கா)

முதல் நூல் - அகத்தியம் ; வழி நூல் - தொல்காப்பியம் ;

சார்பு நூல் - நன்னூல்.

தேர்வு எண் : 7 28-11-2020

1. நல்லாசிரியர் இலக்கணம் :

குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை யாசிரி யன்னே.

விளக்கம் :-

1. நற்குடிப்பிறப்பு 2. இரக்க உணர்வு 3. தெய்வ வழிபாடு 4. பெருந்தன்மை 5. பல நூல்களைக் கற்று தெளிந்த அறிவு 6. சுவைபடவும் தெளிவாகவும் விளக்கும் சொல்லாற்றல். 7. நிலம், மலை, நிறைகோல், மலர் எனபவற்றை ஒத்த சிறந்த குணங்கள் உடைமை 8. காலத்திற்கேற்பச் சிந்திக்கும் ஆற்றல் 9. இவற்றைப் போன்ற பிற உயர்ந்த குணங்களையும் பெற்றிருத்தல்.

நிலத்தின் மாண்புகள் :

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

ஆசிரியர்

நிலம்

| | |
|---|---|
| 1. பிறரால் அறிய முடியாக் கல்வி பெருமை உடைமை. | 1. சிறிடத்தில் நின்று அளவிட முடியா உருவப் பெருமை உடையது. |
| 2. எவ்வளவு சுமை ஏற்றினும் கலங்காது. | 2. எத்துணைப் பெரிய கல்வியாளன் அறினும் கலங்காது வாதம்புரிதல். |
| 3. குத்தினும் வெட்டினும் பொறுத்துக் கொள்வது. | 3. மாணாக்கரும் பிறரும் செய்யும் குற்றங்களைப் பொறுத்தல். |
| 4. உழவரின் உழைப்புக்கு ஏற்பப் பயன் அளிப்பது. | 4. மாணாக்கரின் முயற்சிக்கு ஏற்பப் பயன்படுதல். |

## மலையின் மாண்புகள்

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே.

| மலை | ஆசிரியர் |
| --- | --- |
| 1. அளக்க முடியா அளவுடையது. | அளவில்லாக் கல்வியறிவு உடைமை. |
| 2. அளக்க முடியாப் பொருள்வளம் உடையது. | பன்னூல் புலமை உடைமை. |
| 3. எத்தகையவராலும் அசைக்க முடியாது. | பிற புலவராலும் வெல்ல முடியாத கல்வி அறிவு உடைமை. |
| 4. தொலைவில் உள்ளவர் காணும்படியான உயரம் உடையது. | தொலைவில் உள்ளவரும் அறியும் கல்விப் புகழுடைமை. |
| 5. வானம் வறண்டு பொய்ப்பினும் சுனைகளால் நீரைத் தரும் கொடைத்தன்மை உடையது. | தான் வறுமை அடைந்தாலும் மாணவர்களுக்குக் கல்வி கொடுக்கும் வள்ளன்மை உடைமை. |

## நிறைகோல் ( தராசு ) மாண்புகள்.

ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே.

| நிறைகோல் | ஆசிரியர் |
| --- | --- |
| 1. பொருளின் அளவை ஐயம் தீரத் தெளிவாகக் காட்டுதல். | கல்வியை ஐயமறக் கற்றுத் தருதல். |
| 2. எப்பக்கமும் சாயாமல் நடுநிற்றல். | வேண்டியவர், வேண்டாதவர் என்று எவர் பக்கமும் சாயாது நடுநிற்றல். |

Scanned with CamScanner

## மலரின் மாண்புகள்

மங்கலம் ஆகி இன்றி யமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் உடையது பூவே.

| மலர் | ஆசிரியர் |
| --- | --- |
| 1). மங்கல காரியங்களுக்கு உரியது | நன்மையான செயல்களுக்கு உரியவர். |
| 2). தானின்றி எச்செயலும் நடைபெறாச் சிறப்புடையது. | ஆசிரியர் இன்றி எச்செயலும் நடைபெறா மா. |
| 3). எல்லோரும் விரும்பிச் சூடும் தன்மை கொண்டிருத்தல். | அனைவராலும் போற்றப்படுகின் குணமுடைமை. |
| 4). மென்மைத் தன்மை உடையது. | எல்லோரும் எளிதில் நெருங்கி அன்பு பாராட்டுதல் |
| 5). உரிய காலத்தில் மலர்தல் | எப்போதும் முக மலர்ச்சியுடை-மை. |

தேர்வு எண் - 8 30-11-2020.

3, 4, 7, 4 8, 51-55.

1. பொது, சிறப்பு பாயிரத்தின் இயல்புகள் :-

பொதுப்பாயிரத்தின் இலக்கணம் :-

நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவை பொதுப் பாயிரம்.

விளக்கம் :-

1). நூலினது இலக்கணம் 2). நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம் 3). ஆசிரியர் மாணவர்க்குப் பாடம் சொல்லும் முறை.

## சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் :-

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

விளக்கம் :-

1). நூலை எழுதியவனின் பெயர் 2). நூலின் வழி
3). நூல் வழங்கும் நாட்டின் எல்லைகள் 4). நூலின் பெயர்
5). தொகை, வகை, விரியுள் ஒன்றாதல் 6). நூல் கூறும் பொருள்.
7). நூலைக் கேட்டற்கு உரியர் 8). நூலைக் கேட்பதால் உண்டாகும் பயன்.

காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

9). நூல் செய்த காலம் 10). நூலை அரங்கேற்றிய அவைக்களம்
11). நூல் செய்தற்குரிய காரணம்.

## சிறப்புப் பாயிரம் செய்தற்கு உரியார் :-

தன் ஆசிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகும் உரை காரன் என்றி
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே.

விளக்கம் :-

1). தனக்கு நூலைக் கற்பித்த ஆசிரியன் 2). தன்னுடன் பாடம் கேட்டவன் . 3). தன்னுடைய மாணாக்கன் 4). தான் செய்த நூலுக்கு உரை எழுதும் தகுதி படைத்தவன்.

## சிறப்புப் பாயிரத்தைப் பிறர் செய்யக் காரணம் :-

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தன் புகழ்தல் தகுதி அன்றே.

பிறர்க்குத் தோன்றாத நுட்பங்கள் எல்லாம் தோன்றும்படி சூத்திரங்கள் அமைய ஒரு நூலை ஒருவன் செய்து முடித்தான். அத்தகு சிறப்புத் தன்மை உடையவன் ஆயினும் அவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் தகுதியற்றதாகும்.

தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள் :-

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே.

விளக்கம் :-

1. மன்னன் அவைக்கு ஓலை எழுதுதல். 2. தன் வலிமையை அறியாதவர். 3. அவைக்களத்தில் வாதம் செய்து வெல்லுதல். 4. தன்னைப் பிறர் பழித்தல்.

பாயிரத்தின் இன்றியமையாமை :-

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

விளக்கம் :-

ஆயிரம் உறுப்புகளைக் கொண்டதாய்ப் பரந்து விரிந்த நூலாக இருப்பினும் பாயிரத்தைப் பெறாவிடில் அது நூலாகாது.

பாயிரத்தின் சிறப்பு :-

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

விளக்கம் :-

1. மாளிகைக்கு ஓவியமும் 2. பெரிய நகரத்திற்கு கோபுரமும் 3. அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடைய

பெண்ணுக்கு அணியும் அழகு சேர்ப்பன. அவற்றைப் போலக் கருதி, நுண்ணிய பொருளைக் கூறும் பாயிரங்களை எவ்வகைப்பட்ட நூல்களுக்கும் முன்னர் வைத்தனர் பெரியோர். அதனால் முதலில் பாயிரம் இல்லாதது நூலாகாதாம்.

தேர்வு எண் - 9 9-12-2020

1. பாடம் கேட்கும் முறை :-

> கோடல் மரபே கூறும் காலைப்
> பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
> குணத்தொடு பழகி அவன்குறிப் பிறைந்து
> இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
> பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
> சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
> செவிவா யாக நெஞ்சு களனாகக்
> கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
> போவெனப் போதல் என்மனார் புலவர்.

விளக்கம் :-

1. தக்க காலத்தில் பாடம் கேட்கச் செல்ல வேண்டும்.
2. ஆசிரியனை விருப்பமுடன் வழிபட வேண்டும்.
3. ஆசிரியனின் குணம் அறிந்து பழக வேண்டும்.
4. அவனின் குறிப்பறிந்து செயல்பட வேண்டும்.
5. அமர் என்று கூறிய பின்னரே அமர வேண்டும்.
6. பழைய பாடங்களைச் சொல் என்றவுடன் சொல்ல வேண்டும்.
7. மிகுந்த தாகம் உள்ளவன் நீரைப் பருகத் துடிப்பது போல விருப்பத்துடன் பாடம் கேட்க வேண்டும்.
8. அசைவற்று இருக்கின்ற சித்திரம் போல அடக்கமுடன் பாடம் கேட்க வேண்டும்.
9. செவியை வாயாகவும் நெஞ்சைக் கொள்ளுமிடமாகவும் கொண்டு பாடம் கேட்க வேண்டும்.
10. பின்பு கேட்டவற்றைத் திரும்பவும் கேட்டு மனத்தில் நிறைத்துக்கொள்ள வேண்டும்.
11. ஆசிரியர் போய்வா என்று சொன்ன பின்னரே கற்கும் அவ்விடத்தை விட்டு அகல வேண்டும்.

Scanned with CamScanner

## நூல் பயிலும் முறை :-

> நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
> பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
> ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
> அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
> வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
> கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

### விளக்கம் :-

1. நூலைக் கற்கும் மாணவன் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அறிதல்.
2. மூல பாடத்தை உயர்வாகப் போற்றிப் பலகாலும் சிந்தித்தல்.
3. கேட்ட பாடத்தை நினைத்துப் பார்த்தல்.
4. மீண்டும் ஆசிரியனிடம் சென்று கேட்டவற்றைக் குறைதீரப் பதியும் படிக் கேட்டல்.
5. எப்போதும் கல்வியைப் பற்றிப் பேசும் மாணவர்களிடம் பழகுதல்.
6. தன் ஐயத்தைப் பிறரிடம் கூறித் தெளிவு பெறுதல்.
7. பிறரது ஐயத்தைத் தெளிவுபடுத்துதல்.

## இருமுறை பாடம் கேட்டல் :-

> ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
> பெருக நூலிற் பிழைபா டிலனே.

### விளக்கம் :-

ஒருமுறை பாடம் கேட்டவன் அப்பாடத்தை மறுமுறையும் கேட்க அந்நூலைப் பெரிதும் பிழையின்றி உணர்வான்.

## மும்முறை பாடம் கேட்டல் :-

> முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.

### விளக்கம் :-

மூன்று முறை பாடம் கேட்டால் மாணவன் என்னும் நிலையிலிருந்து மாறி அப்பாடத்தை விளங்க உரைக்கும் ஆசிரியனாகும் தன்மை பெறுவான்.

## ஆசிரியரால் மாணவர் பெறும் அறிவு :-

Scanned with CamScanner

> ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
> கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்.

விளக்கம் :-

மாணவன் ஆசிரியன் கற்பித்தவற்றைத் தன் அறிவொடு பொருந்தக் கற்றான் ஆயினும் கால் பங்குப் புலமையை மட்டுமே பெறுவான்.

முழுப் புலமை பெற வழி :-

> அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
> செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
> மையறு புலமை மாண்புடைத்து ஆகும்.

விளக்கம் :-

தன்னொடு கற்கும் மாணவருடன் பாடத்தைப் பற்றிப் பேசுவதன் வாயிலாக மேலும் கால் பங்குப் புலமை பெறுவான். எஞ்சிய அரைப்பங்கினைத் தன்னொடு கற்பவருக்கும் பிறருக்கும் எடுத்துரைப்பதால் பெறுவான்.

## தேர்வு எண் -10 2-12-2020

1. நூலுக்குப் பெயரிடும் முறை :-

> முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி
> பொருள் செய் வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்
> இடுகுறி யானும் நூற்கு எய்தும் பெயரே.

விளக்கம் :-

ஒரு நூலுக்கு முதல்நூல் முதலாகத் தன்மை ஈறாகக் கூறிய ஏழும் பிறவுமாகிய காரணங்களாலும் இடுகுறியாலும் பெயர் அமையும்.

1. முதல் நூலால் பெயர் பெற்றவை – பாரதம், இராமாயணம்
2. ஆக்கியோனால் பெயர் பெற்றவை – அகத்தியம், தொல்காப்பியம்
3. அளவால் பெயர் பெற்றவை – பன்னிருபடலம், நாலடி நானூறு
4. மிகுதியால் பெயர் பெற்றவை – களவியல் போன்றவை
5. பொருளால் பெயர் பெற்றவை – அகப்பொருள், புறப்பொருள்.

6. செய்வித்தோனால் பெயர் பெற்றவை - சாதவாகனம், வீரசோழியம்

7. தன்மையால் பெயர் பெற்றவை - சிந்தாமணி, நன்னூல்

8. இடுகுறியால் பெயர் பெற்றவை - நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு

பிற காரணங்களால் அமையும் பெயர்கள் :-

1. முதற்குறிப்பு - ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்
2. இடம் - களவழி நாற்பது
3. காலம் - கார் நாற்பது
4. அக்கியோனின் ஆசிரியர் - நேமிநாதம்
5. உவமை - திரிகடுகம், சிறுபஞ்சமூலம்.

2) உரைகளின் வகைகள் :-

உரையின் பொது இலக்கணம் :-

> பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
> தொகுத்துரை உதாரணம் வினா விடை விசேடம்
> விரிவு அதிகாரம் துணிவு பயனொடு
> ஆசிரிய வசனம் என்ற ஈரேழ் உரையே.

விளக்கம் :-

1. மூலபாடத்தை எடுத்துரைத்தல். 2. கருத்துரை கூறுதல். 3. சொல்வகை கூறுதல் 4. சொல்லுக்குப் பொருள் உரைத்தல். 5. கருத்தைத் தொகுத்துக் கூறுதல். 6. மேற்கோள்களைக் காட்டுதல் 7. ஐயங்களைத் தானே தோற்றுவித்தல். 8. அதற்குரிய விடையைக் கூறுதல். 9. நூல் கூறும் பொருளன்றி இடத்திற்கேற்ற சிறப்புப் பொருளை எடுத்துரைத்தல்.

10. விரித்துக் கூறவேண்டிய இடத்து விளக்கமுறக் கூறுதல்

11. சொல்லும் பொருளை அதிகாரத்துடன் பொருத்துமுறை காட்டுதல்.

12. ஐயம் ஏற்படும் இடங்களில் இதற்கு இதுவே பொருள் எனத் துணிந்து கூறுதல்.

13. இவ்வாறு தொகுத்துக் காட்டுவதால் ஏற்படும் பயனை எடுத்துரைத்தல்.

14. உரையிடத்துத் தொன்னூல் ஆசிரியர்களின் பாடங்களை இயைத்துக் காட்டுதல்.

காண்டிகை உரையின் இலக்கணம்:

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினா விடை ஆக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை.

விளக்கம்:

1. கருத்தினை கூறுதல் 2. பதப்பொருள் கூறுதல். 3. எடுத்துக்காட்டால் நிறுவுதல் ஆகிய மூன்றனைச் சொல்லுதல். 4. வினா எழுப்புதல் 5. விடை கூறி விளக்குதல். ஆகிய ஐந்தையும் கூட்டி சொல்லுவது காண்டிகையாகும்.

விருத்தி உரையின் இலக்கணம்:

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் அண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி.

விளக்கம்:

1. சூத்திரப் பொருளை விளக்குதல் 2. அவ்விடத்திற்குத் தேவையான பொருள்களைத் தன்னால் கொண்டும் பிறரால் கொண்டும் ஐயம்நீங்க உண்மைப் பொருளைத் தெளிவுபட விரிவாக உரைத்தல்.